**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.333/2023

நாள்: 30.07.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 30.07.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | ப.சா.13 /அ.த.சா.10 | ஜாதி | :----------- |
| பெயர் | சிவசங்கர் | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்பொழுது சேலம் மாவட்டம் வாழப்பாடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 11/4/2004 ஆம் தேதி தொளசம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலையை அலுவலில் இருந்தபோது ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து மார்க்கண்டன் என்பவருக்கு காயம் பட்டதாக கிடைக்கப்பெற்ற அடிதடி இன்டிமேஷன் பெயரில் நிலைய தலைமை காவலர் 10 73 வசந்த் என்பவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வாக்குமூலம் பதிவு செய்து வரும்படி பணித்ததன் பேரில் அவர் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மார்க்கண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து என்னிடம் ஒப்படைத்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண் 80/2021 இதச பிரிவு 294(பி), 307படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் ஓமலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை வழக்குக் கோப்பில் வைத்து வழக்கின் புலன் விசாரணைக்கு வேண்டி வழக்கு கோப்பை தாரமங்கல வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6. அவர் வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் நான் பதிவு செய்தேன் என்றால் ஆமாம். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் படி தான் மருத்துவமனைக்குச் சென்று அ.சா.1ஐ விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். எனக்கு எத்தனை மணிக்கு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தது என்றால் 10.04.2021 ஆம் தேதி 9.30 மணிக்கு தகவல் கிடைத்தது. 11.04.2021 ம் தேதி இரவு 8.30 மணிக்கு என்றால் ஆமாம் ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 11.04.2021 மணிக்கு நான் நிலைய அலுவலிருந்து போது காலை 10 மணிக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டு பதிவு செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய் புகாரை அனுசரித்து நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/−த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.